# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 20/2024** **Date:01.09.2025.**

**( PW1)- Edwin**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**1.** நான் இந்த வழக்கை புழங்குரிமை அடிப்படையில் தாக்கல் செய்துள்ளனா அல்லது உரிமை மூலத்தில் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளனா என்றால் உரிமை மூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ. 1 ஆவணத்தில் பி பட்டிகை சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ஆவணம் மூலம் பி பட்டிகை சொத்தில் எனக்கு உரிமை இருப்பதாக எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. நான் வாசாஆ.1 ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் காண்பித்து அதனடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**2.** வாசாஆ. 1 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு வழக்கு B பட்டிகை சொத்தில் எந்த உரிமையுமில்லையென்றாலும் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு B பட்டிகை சொத்து சர்வே எண் 236/10 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணிற்கு நான் வரி செலுத்துகிறேனா என்றால் வரி கட்டவில்லை. பிரதிவாதியின் சொத்து வழக்கு பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் சர்வே எண் 236/8, 9 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 236/8, 9 சொத்திலிருந்து சர்வே எண் 236/10 ற்கு இடம் பாதைக்காக விட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**3.** மேற்படி சர்வே எண் 236/10 ற்கு 4 அடி வழிபாதையாக பிரதிவாதிகளின் மூதாதையர்களான பெல்சியாஸ், லூயிஸ் ஜான், தாமஸ் ஆகியோர்கள் அவர்களது பயன்பாட்டிற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதிவாதிகளின் பாக பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை பிரதிவாதிகள் தனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் பார்க்கவில்லை.

பிரதிவாதிகளின் எதிருரையை படித்து பார்க்காமல் நான் எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**4.** பிரதிவாதிகளால் ஒதுக்கப்பட்டுள்ள சர்வே எண் 236/10 பாதை எனது சொத்தான 236/13 b தொடாது என்றால் சரியல்ல. சர்வே எண் 236/10 பாதை எனது சொத்தை தொடாது என்று பிரதிவாதிகளின் எதிருரையில் குறிப்பிட்டுள்ளதை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன், அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எனது சொத்தான 236/13 b லிருந்து கருங்கல் பிரதான சாலை செல்வதற்கு 4 அடி அகலத்தில் சர்வே எண் 240/ 1,2,9,12,13,முதல் 16 வரையிலான சொத்துகளின் வழியாக பால் தெருவை அடைந்து கருங்கல் பிரதான சாலைக்கு சுமார் 150 மீட்டர் நீளத்தில் ஒரு வேற்று பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையின் இருபுறமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கதியை நான் மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், எனது வழக்கில் அதை நான் குறிப்பிடவில்லை.

**5.** பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்து நான் தாக்கல் செய்த பதிலுரையிலும் வேற்று பாதை அமைந்தளள் சங்கதியை நான் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். இந்த வழக்கை நான் உரிமைகோரும் நபர்களை சேர்க்கவில்லையென்றாலும் , பொதுநலன் கருதி தாக்கல் செய்யவில்லையென்றாலும் சரியல்ல. அவ்வாறு பொதுநலன் கருதி விளம்புகை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் அனுமதி எதுவும் பெறவில்லையென்றாலும் தினசரி நாளிதழில் பொது அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லையென்றாலும் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்திற்கு பிரதிவாதிகளால் வரி செலுத்தப்பட்டு அவர்கள் விட்டு கொடுத்த இடமாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பி பட்டிகை சொத்தில் சாலை அமைப்பதற்கு பஞ்சாயத்தில் அனுமதி கோரப்பட்டு ஆனால் அனுமதி கொடுக்கவில்லை என்று சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார்.

**6.** மேற்படி சங்கதியை எனது வழக்கில் நான் சொல்லவில்லையென்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்து அரசு ஆவணங்களில் நிலவியல் பாதையாகவும் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அரசு ஊழியர்களாக வெளியூரில் வேலை செய்து வருவதை பயன்படுத்தி கொண்டு அவர்களது இடத்தில் உள்ள மரங்களை நான் முறித்தேன் என்றால் சரியல்ல. பட்டிகை சொத்தின் மேற்கு பக்கத்தில்

சர்வே எண் 236/4, 3 A 1 ஆகிய இடங்களை பிரேம் , சந்தோஷ் ப்ளாட்டுகள் போட்டு விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பிரேம் , சந்தோஷ் தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரேம் , சந்தோஷ் தூண்டுதலின் பேரில் அவர்களிடம் பணம் பெற்று கொண்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் குறிப்பிட்ட பின்னரும் எனது கூடுதல் பதிலுரையில் அதை மறுத்துரைக்கவில்லையென்றால் சரியல்ல.

**7.** சர்வே எண் 236/1 b ன் உரிமையாளர் அவரது சொத்தை நான் பாதையாக அத்துமீறி பயன்படுத்தியதை தடுக்கும் பொருட்டு கேட் அமைத்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் இது பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்து எனக்கு எந்த விதத்திலும் பயன்படாது என்றால் சரியல்ல. நான் பிரேம் , சந்தோஷ் தூண்டுதலின் பேரில் பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்